செ.வெ.எண்:06/2016

நாள்:06.09.2016

## பத்திரிகை செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படவும் நுகர்வோர் குறைகளை களையவும் நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் எதிர்வரும் 10.09.2016 அன்று காலை 10.00 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களில் துணை ஆட்சியர் நிலையிலான மண்டல அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களில் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள் ஆகிய அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் சம்மந்தப்பட்ட கிராமத்தைச் சார்ந்த குடும்ப அட்டைதாரர்கள் கலந்து கொண்டு பொது விநியோகத் திட்டம் தொடர்பான தங்களது குறைகளைத் தெரிவித்து தீர்வு பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | வட்டம் | கிராமத்தின் பெயர் | மண்டல அலுவலர் |
|---|---|---|---|
| 1. | சிவகங்கை | பாகனேரி | கோட்டாட்சியர், சிவகங்கை |
| 2. | மானாமதுரை | தெற்கு சந்தனூர் | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், சிவகங்கை |
| 3. | இளையான்குடி | சாத்தனி | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், சிவகங்கை |
| 4. | காரைக்குடி | ஆற்காடு வெள்ளூர் | சார் ஆட்சியர், தேவகோட்டை |
| 5. | தேவகோட்டை | பெரிய உஞ்சனை | உதவி ஆணையர் (ஆயம்), சிவகங்கை |
| 6. | திருப்பத்தூர் | சிங்கம்புணரி | தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) சிவகங்கை |
| 7. | திருப்புவனம் | மேலச்சொரிக்குளம் | மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், சிவகங்கை |
| 8. | காளையார்கோவில் | புளியடிதம்பம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(நிலம்) சிவகங்கை |

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.